புத்தசாசனம், மதம் மற்றும் கலாசார விவகார அமைச்சு

டவர் மண்டப அரங்க மன்றம்

# வெற்றிடங்கள்

புத்தசாசனம், மதம் மற்றும் கலாசார விவகார அமைச்சின் கீழ் உள்ள டவர் மண்டப அரங்க மன்றத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்தப் பதவிகள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கு உரிமைத்துவமுடைய நிரந்தர பதவிகளாகும்.

## 01. உதவி / பிரதிப் பணிப்பாளர் (நாடக மேம்பாடு, கலைஞர் நலன்புரி மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்)MM 1-1 - பதவி எண்ணிக்கை - 01

**01.01 தகைமைகள் - வெளிவாரி விண்ணப்பதாரிக்கு**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் நாடகம் மற்றும் அரங்கக்கலை / கல்வி / அழகியல் / கலை / வெகுசன தொடர்பாடல் தொடர்பான பட்டம் வெற்றிருத்தல்.

**01.02 அனுபவம்**

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச அல்லது அரை அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் ஒரு வருட காலம் தொடர்புடைய துறையில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**01.03 ஏனைய தகைமைகள்**

கணனிப் பயன்பாடு மற்றும் ஆங்கில மொழியில் கடமையாற்றும் ஆற்றல்.

பல்வேறு வகையான நாடக மற்றும் கலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதல், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், மேடைக் கச்சேரி நிகழ்ச்சிகளைத் திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல் மற்றும் செயற்படுத்தலில் உள்ள அனுபவம்

நாடகம் மற்றும் அரங்கேற்றக் கலை நிகழ்ச்சித் திட்டங்களுக்காக கதைவசனப் பிரதிகள் மற்றும் இயக்குதல் தொடர்பாக உள்ள அனுபவம் மற்றும் தமிழ் மொழியில் கடமையாற்றுவதில் உள்ள ஆற்றல் விசேடத் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

**01.04 தகைமைகள் - உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு**

மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

**மற்றும்**

''கனிஷ்ட முகாமைத்துவ'' JM சேவை வகுதியில் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

**01.05 சம்பள அளவு: ரூபா 91,690 – 10x2480 – 15x3450 – 168,240.00**

(01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

(மேற்கூறிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2026ஆம் வருடத்திற்கு உரித்தான அடிப்படைச் சம்பளம் மாதாந்தம் 81,710.00 ரூபாவாகும். திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட வாழக்கைச் செலவுப் படியாக 17,800.00 ரூபா உரித்தாகும்.)

**01.06 வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

**01.07 தெரிவு செய்யும் முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்.

இந்தப் பதவிக்கு உரித்தான சிறப்புரிமைகள்

- திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் கொடுப்பனவுகள் உட்பட ஏனைய சகல கொடுப்பனவுகள்
- 02/2022 அரச வியாபார சுற்றுநிருபத்தின் பிரகாரம் தொலைபேசிக் கொடுப்பனவு.

## 02. சாரதி – PL 3 – பதவி எண்ணிக்கை - 01

**02.01 ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் கல்வித் தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு**

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகள் சகிதம் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**தேர்ச்சி**

மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகனம் செலுத்தும் உரிமத்தைப் பெற்றிருத்தல் மற்றும் சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் வாகனம் செலுத்துதல் தொடர்பில் குறைந்தபட்சம் மூன்று (03) அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு**

மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகனம் செலுத்தும் உரிமத்தைப் பெற்றிருத்தல் மற்றும் சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் வாகனம் செலுத்துதல் தொடர்பில் குறைந்தபட்சம் மூன்று (03) அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

ஆரம்ப அரைத் தேர்ச்சி (PL-2) அல்லது ஆரம்ப தேர்ச்சியற்ற (PL-1) சேவை வகுதியில் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**02.02 சம்பள அளவு:** ரூபா 43280 – 10x490 – 10x540 – 10x590 – 12x630 = 67040.00

அதன் பிரகாரம் ரூபா 40834.00 அடிப்படைச் சம்பளத்தில் ஆட்சேர்க்கப்படும்.

**கொடுப்பனவுகள்:** வாழ்க்கைச் செலவுப் படி ரூபா 17800.00

**02.03 வயது:** 18 வயதிற்குக் குறையாமல் மற்றும் 45 வயதிற்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

(அரச, அரை அரச, நியதிகள் சபைகளில் தற்காலிக, சமயாசமய, பதிலீடு, ஒப்பந்தம் அல்லது நிவாரண அடிப்படையில் சேவையாற்றும் சாரதிகளும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.)

## 03. பராமரிப்பாளர் PL-3 – பதவிகளின் எண்ணிக்கை 01

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு**

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகள் சகிதம் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**03.02 தேர்ச்சி**

பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றறினில் NVQ 4வது நிலைக்குக் குறையாத நிலையில் தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு**

இயைபுடைய துறையில் ஐந்து (05) வருட அனுபவம் மற்றும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றறினில் NVQ 4வது நிலைக்குக் குறையாத நிலையில் தொழில்சார் பரீட்சையொன்றில் (Trade Test) சித்தியடையும் ஆரம்ப அரைத்தேர்ச்சி (PL - 2) அல்லது ஆரம்ப தேர்ச்சியற்ற (PL - 1) சேவை வகுதி ஊழியர்கள்

**அல்லது**

பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றறினில் NVQ 4வது நிலைக்குக் குறையாத நிலையில் தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

**03.03 சம்பள அளவு :** ரூபா 43280 – 10x490 – 10x540 – 10x590 – 12x630 = 67040.00

அதன் பிரகாரம் ரூபா 40834.00 அடிப்படைச் சம்பளத்தில் ஆட்சேர்க்கப்படும்.

கொடுப்பனவுகள்: வாழ்க்கைச் செலவுப் படி ரூபா 17800.00

**03.04 வயது:** 18 வயதிற்குக் குறையாமல் மற்றும் 45 வயதிற்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

## 04. மேடை ஒளியமைப்பு தொழில்நுட்பவியலாளர் PL-3 – பதவிகளின் எண்ணிக்கை 01

**04.01 ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் கல்வித் தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு**

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகள் சகிதம் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**04.02 தேர்ச்சி**

மேடை ஒளியமைப்பிற்கு இயைபாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றறினில் NVQ 4வது நிலைக்குக் குறையாத நிலையில் தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு**

இயைபுடைய துறையில் ஐந்து (05) வருட அனுபவம் மற்றும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றறினில் NVQ 4வது நிலைக்குக் குறையாத நிலையில் தொழில்சார் பரீட்சையொன்றில் (Trade Test) சித்தியடையும் ஆரம்ப அரைத்தேர்ச்சி (PL - 2) அல்லது ஆரம்ப தேர்ச்சியற்ற (PL - 1) சேவை வகுதி ஊழியர்கள்

அல்லது

மேடை ஒளியமைப்பிற்கு இயைபாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றினில் NVQ 4வது நிலைக்குக் குறையாத நிலையில் தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

**04.03 சம்பள அளவு: ரூபா 43280 – 10x490 – 10x540 – 10x590 – 12x630 = 67040.00**

அதன் பிரகாரம் ரூபா 40834.00 அடிப்படைச் சம்பளத்தில் ஆட்சேர்க்கப்படும்.

கொடுப்பனவுகள்: வாழ்க்கைச் செலவுப் படி ரூபா 17800.00

**03.04 வயது:** 18 வயதிற்குக் குறையாமல் மற்றும் 45 வயதிற்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

**மேற்கூறிய தகல்களுக்கான ஏனைய தகவல்கள்**

- ❖ ஊழியர் சேமலாப நிதியத்திற்கு - தொழில்தருநரின் பங்களிப்பு 15%
  ஊழியரின் பங்களிப்பு 10%
- ❖ ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிதியத்திற்கு தொழில்தருநரின் பங்களிப்பு 3%
- ❖ அரச, அரசு சார்ந்த மற்றும் நியதிகள் சட்ட சபையில் சேவையாற்றுபவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல

**சகல விண்ணப்பதாரர்களும்**

- ❖ இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
- ❖ பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதுடன் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உள மற்றும் உடல் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- ❖ சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
- ❖ அரச, அரை அரச மற்றும் நியதிகள் சபைகளில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் தமது தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பதாரரினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2026-07-22ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். எதிர்காலத்தில் டவர் மண்டப அரங்க மன்றம் சுய வருமானம் ஈட்டும் நிறுவனமாக வேண்டும் என்பதால் திறமையான, தேர்ச்சிபெற்ற மற்றும் மேலான வினைத்திறனுடைய விண்ணப்பதாரர்கள் மட்டும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**டவர் மண்டப அரங்க மன்றம்,**
**சவ்சிறிபாய, இல. 123, விஜேராம மாவத்தை,**
**கொழும்பு 07.**